DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.92/2018**

Deposition of Witness

2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - திரு.ஜெயராமன் **PW-10** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - | தொழில் | - |
| கிராமம் | - | சமயம் | - |
| தாலுக்கா | - | வயது | - |

**(எதிரிகள் ஆஜரில் இல்லை, குவிமுச.317 மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது).**

<u>முதல் விசாரணை:</u>-

1) நான் கிராம நிர்வாக அலுவலராக பீளமேட்டில் பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று உள்ளேன். கடந்த 2012ம் ஆண்டு பீளமேடு கிராம நிர்வாக அலுவலராக செயல்பட்டபோது, ஈரோடு 'அ' கிராம நிர்வாக அலுவலராக கூடுதல் பொறுப்பு வகித்தேன். அப்போது மாணிக்கம் என்பவர் ஈரோடு 'அ' கிராம உதவியாளராக பணியிலிருந்தார். கடந்த 29.08.2012 ஈரோடு நகர காவல் ஆய்வாளர் அழைப்பின்பேரில் நானும், கிராம உதவியாளர் மாணிக்கம் என்பவரும் காலை 10.30 மணிக்கு ஈரோடு நகர காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்தில் ஒருவர் உட்கார்ந்து இருந்தார். ஆய்வாளர் என்னிடம் TNPSC கேள்வித்தாள் கசிந்த வழக்கு தொடர்பாக ஸ்ரீதர்ராஜ் என்கிற பாலன் என்பவரை விசாரித்துக் கொண்டிருப்பதாக சொன்னார். மேற்படி ஸ்ரீதர்ராஜ் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை ஈரோடு நகர காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்.

அப்போது சுமார் 11.00 மணியிருக்கும். பாலக்காட்டில் இருக்கும் நோபல் பிளாசா லாட்ஜுக்கு அழைத்துச் சென்றால், அறை எண்.204 ல் கப்போர்டு மேல்புறத்தில் உள்ள குழியில் மறைத்து வைத்திருக்கும் சான்றிதழ்கள் மற்றும் மைக்ரோமேக்ஸ் போனை எடுத்து தருவதாக சொன்னார். மேற்படி ஒப்புதல் வாக்ககுமூலத்தில் நானும், கிராம உதவியளாரும், காவல் ஆய்வாளரும் மற்றும் எதிரியும் கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.35** ஆகும்.

2) மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் பெறப்பட்ட சங்கதிகளின் அடிப்படையில் காவல் ஆய்வாளர், நான், எனது உதவியாளர் மற்றும் எதிரி ஆகியோர் பாலக்காடு சென்று அங்கு KSRTC பேருந்து நிலையம் அருகில் உள்ள நோபல் பிளாசா என்ற லாட்ஜுக்கு சென்றோம். அங்கு அறை எண்.204 ல் கப்போர்டு மேல்புறத்தில் உள்ள குழியில் சிவப்பு பார்டர் போட்ட மஞ்சள் நிற கவர் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த சான்றிதழ்களையும், மைக்ரோமேக்ஸ் செல்போன் ஒன்றையும் ஸ்ரீதர்ராஜ் எடுத்துக் கொடுக்க, ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார். அதில் நானும், எனது உதவியாளரும் கையெழுத்து செய்தோம். மேற்படி ஸ்ரீதர்ராஜ் என்பவரைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும்(எதிரி ஆஜரில் இல்லை, மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது). கைப்பற்றப்பட்ட பொருட்களை என்னால் அடையாளம் காட்ட முடியும். அன்றைய தினம் 10 சான்றிதழ்கள் கைப்பற்றப்பட்டன. மேற்படி கைப்பற்றப்பட்ட 10 சான்றிதழ்களில் மதிப்பெண்பட்டியல் மற்றும் மாற்றுச் சான்றிதழ்கள் இருந்தன. மேற்படி சான்றிதழ்கள் **அ.சா.ஆ.36 (10 வரிசைகள்)** ஆகும். கைப்பற்றப்பட்ட மைக்ரோமேக்ஸ் செல்போன் **சா.பொ.7** ஆகும். வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் மற்றும் சிபிசிஐடி போலீசாசர் என்னை விசாரித்தனர்.

<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.</u>

<u>4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22, 23, 24, 25, 26 முதல் 30 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

3) 29.08.2012 ம் தேதி காலை 10.30 மணிக்கு ஈரோடு நகர காவல் நிலையத்தில் நான் முன்னிலையானதாக போலீசார் விசாரித்தபோது நான் சொல்லவில்லை என்றால்,

சரியல்ல, சொல்லியுள்ளேன். அன்றைய தினம் என்னை காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி ஏதேனும் அழைப்பாணை கொடுத்தார்களா என்றால், இல்லை. என்னை போலீசார் செல்போன் மூலம் அழைத்தார்கள். போலீசார் எந்த செல்போன் எண்ணிலிருந்து, எனது எந்த செல்போன் எண்ணிற்கு அழைத்தார்கள் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால், சரிதான். அன்றைய தினம் ஈரோடு நகர காவல் நிலையத்திற்கு சென்ற விவரத்தை எனது நாட்குறிப்பில் பதிவு செய்யவில்லை என்றால், சரிதான். நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது காவல் நிலையத்திலிருந்த நபர் 14.08.2012 ம் தேதி காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டதாக தெரிந்து கொண்டேன். அவர் 7 நாட்கள் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டார் என்ற விவரத்தை தெரிந்து கொண்டேன். அவர் என்றைய தினம் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டார் என்ற விவரத்தை நான் தெரிந்து கொள்ளவில்லை. அவர் நீதிமன்ற காவலில் இருந்து அழைத்து வரப்பட்டதாக ஆய்வாளர் என்னிடம் சொன்னார்.

4) ஒப்புதல் வாக்குமூலத்தில், அவர் எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரை நீதிமன்றக் காவலிலிருந்து அழைத்து வரப்பட்டார் என்ற சங்கதி எழுதப்பட்டதா என்றால், இல்லை. நான் அந்த நபரைப் பார்த்தேன், ஆனால் பேசவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் கணினியில் தட்டச்சு செய்தார். அது சுமார் 1.30 மணி நேரம் நடந்தது, எத்தனை மணிக்கு ஆரம்பித்து, எத்தனை முடிக்கப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. பாலக்காடு என்பது ஈரோட்டிலிருந்து 165 கி.மீ தொலைவில் உள்ளது என்றால், சரிதான். நான் பாலக்காடு செல்ல, என்னை உயர் அதிகாரிகள் அனுமதி கொடுத்தார்களா என்றால், இல்லை, நானும் சொல்லவில்லை. பாலக்காடு சென்று விட்டு அதே தேதியிலேயே ஈரோடு திரும்பி வந்து விட்டோம். திரும்பிய பிறகு எனது உயர் அதிகாரிகளிடம் அறிக்கை சமர்ப்பித்தேனா என்றால், இல்லை. அதற்கான பயணப்படிகள் எதுவும் நான் கோரவில்லை.

5) பாலக்காடு நோபல் பிளாசா லாட்ஜில் சிசிடிவி இருந்ததா என்று எனக்கு ஞாபகம் இல்லை, மேற்படி லாட்ஜ் எத்தனை தளங்களில் இருந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி அறை அன்று காலியாக இருந்தது, யாருடைய அனுபவத்தில் இருந்தது

என்று லெட்ஜரைப் பார்த்தேனா என்றால், இல்லை. காவல் ஆய்வாளர் மேற்படி லெட்ஜரைப் பார்வையிட்டு எந்த தேதியிலிருந்து எந்த தேதி தேதி வரை யார், யார் தங்கியிருந்தனர் என்ற விவரத்தை பார்வையிட்டாரா என்றால், இல்லை. மேற்படி 10 சான்றிதழ்களும் யார் யாருக்கு சொநதமானவை என்பது குறித்த முழு விவரமும் தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி கைப்பற்றப்பட்ட செல்போனின் எண் மற்றும் IMEI எண் எனக்கு தெரியுமா என்றால், இல்லை. செல்போன் குறித்த தனிப்பட்ட அடையாளங்கள் எதுவும்இல்லை என்றால், சரிதான். நான் காவல் ஆய்வாளர் அழைப்பின் பேரில் நகர காவல் நிலையம் சென்தறாகவும், அங்கு ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாகவும், அங்கிருந்து பாலக்காடு சென்று அங்குள்ள நோபள் பிளாசா லாட்ஜ் அறை எண்.204 ல் சாபொ.7 மற்றும் அ.சா.ஆ.36 ஆகியவை கைப்பற்பப்பட்டதாகவும் கூறுவது பொய் என்றால், சரியல்ல.

**4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22, 23, 24, 25, 26 முதல் 30 வரையிலான எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 15 எதிரிதரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**20 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**